# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## <u>அறிவிப்புகள் 2012–2013</u>

## தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்

1. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் சோழிங்கநல்லூர் பகுதி 1 மற்றும் 3ல் 3662 பன்னடுக்குமாடி குடியிருப்புகள் 811.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் தமிழகத்தில் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 43.20 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் **500** வீட்டுவசதி அலகுகள் **2012–2013**ம் ஆண்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**3.** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சென்னையில் 17 இடங்களில் கட்டப்பட்ட **2238** பழைய அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளை இடித்துவிட்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் அதிக தளபரப்பளவு குறியீடு (FSI) கொண்ட **4691** புதிய தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் **679.30** கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் படிப்படியாக மறுகட்டுமானம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



**4. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளுக்கு இந்த நிதியாண்டில் **10** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு சிறப்பு பராமரிப்புப் பணிகளை வீட்டுவசதி வாரியத்தால் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை மாநகரில் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், திருவான்மியூர் ஆகிய இடங்களில் உள்ள வாரியத்திற்கு சொந்தமான நிலங்களில் அரசு ஊழியர் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதியதாக **400** வாரிய வாடகை குடியிருப்புகள் **60** கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

## கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

**6. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலம் 2012–2013ஆம் நிதியாண்டில் சென்னை மாதவரத்தில் 2 கோடி ரூபாய் செலவில் சமுதாயக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

**7. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் மத்திய அரசின் 13வது நிதிக்குழுவின் மாநில சிறப்பு மானிய உதவியினைக் கொண்டு திருவரங்கம், திருச்சி, வந்தவாசி, தூத்துக்குடி, இராமநாதபுரம், ஒரத்தநாடு மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் உள்ள நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்காக 2882 அடுக்குமாடி குடியிருப்புகள் 145.11 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**8. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் இராஜீவ் வீட்டு வசதி திட்டத்தின் ஒரு பகுதியாக அம்பத்தூர், அத்திப்பட்டு திட்டப்பகுதியில் **108** கோடி ரூபாய் செலவில் கக்கன்ஜி நகரில் வாழும் குடும்பங்களுக்காக **1404** அடுக்கு மாடி குடியிருப்புகள் அமைக்கும் முன்னோடி திட்டம் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று மேற்கொள்ளப்படும்.



## நகர் மற்றும் ஊரமைப்பு ஆணையரகம்

**9. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் தற்போதுள்ள கூட்டு உள்ளூர் திட்டப்பகுதி / புதுநகர் வளர்ச்சிப் பகுதிகளைச் சுற்றி ஏற்பட்டுள்ள முறையற்ற வளர்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு ஆகிய கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளையும் ஒசூர் புதுநகர் வளர்ச்சிப்பகுதிகளை விரிவாக்கம் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் தமிழகத்தில் விடுபட்டுள்ள அனைத்து பகுதிகளையும் திட்டப் பகுதிகளாக கொண்டுவரும்

நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள திட்டமில்லாப் பகுதிகளுக்கு மண்டலத் திட்டம் / முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணியினை மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட உள்ளது. முதல் கட்டமாக 8000 சதுர கி.மீ. உள்ளடக்கிய 27 கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள், 8 புதுநகர் வளர்ச்சிக் குழுமங்களையும் புதியதாக உருவாக்கப்பட உள்ள தர்மபுரி, கோபிசெட்டிப்பாளையம், இராஜபாளையம் மற்றும் கோவில்பட்டி கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளில் மண்டலத் திட்டம்/ முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் நகராட்சியாக உயர்த்தப்பட்ட கீழக்கரை, காயல்பட்டினம்,



விக்கிரமசிங்கபுரம், துவாக்குடி மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளுக்கு முழுமைத் திட்டம் தயாரிக்க புதிய தனித்த உள்ளூர் திட்டக் குழுமமாக அறிவிப்பு செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கு சீரான போக்குவரத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு திட்டங்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் நகரின் மையப் பகுதியில் ஏற்படும் அதிவேக வளர்ச்சியினை பரவலாக்கும் வகையில் நில உரிமையாளர்களின் பங்கேற்புடன் வட்டச் சாலைகள் அமைப்பதற்கும், துணைக் கோள் நகரம் அமைப்பதற்கும் நில ஒருங்கிணைப்பு பகுதித்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. நில உரிமையாளர்களுக்கு மேற்படி திட்டத்தில் அவர்களால் கொடுக்கப்பட்ட இடத்திற்கு விகிதாச்சார அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளாக பகுத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் அனுமதியற்ற



அபிவிருத்திகளைக் கண்டறிந்து அதனை முறைப்படுத்தி சட்ட விதிமுறைகளை அமலாக்கம் செய்வதன் மூலம் அரசுக்கு கூடுதல் வருவாய் ஏற்பட வழிவகை செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட வாகனம் இல்லாத மண்டல மற்றும் உள்ளூர் திட்டக்குழும அலுவலகங்களுக்கு வாகன வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

| **மண்டல அலுவலகங்கள்** | **உள்ளூர் திட்டக்குழும அலுவலகங்கள்** |
|---|---|
| விழுப்புரம் | மாமல்லபுரம் |
| தர்மபுரி | காஞ்சிபுரம் |
| பெரம்பலூர் | வேலூர் |
| திருச்சி | ஈரோடு |
| | திருப்பூர் |
| | திருநெல்வேலி |
| | தூத்துக்குடி |
| | நாகர்கோயில் |

**15. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் ஒப்புதல் பெறாத மனைப்பிரிவுகளில் மனைகளை வாங்குவதால் அப்பாவி பொதுமக்களுக்கு ஏற்படும் துன்பங்களை களைவதற்காக, ஊராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒப்புதல் அளிக்கப்படாத மனைகளை வரன்முறைப் படுத்துவதற்கான திட்டம் தமிழக அரசால் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.



## சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்

**16. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் சென்னைப் புறநகர் பேருந்துநிலையத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கான தேவைகள் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு 2000 இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் 50 சீருந்துகள் நிறுத்தக்கூடிய அடித்தள நிறுத்துமிடம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**17. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் கோயம்பேட்டில் மக்கள் நீண்ட நாட்களாக எதிர் நோக்கியுள்ள உணவு தானிய வளாகம் சுமார் 60 கோடி ரூபாய் மதிப்பில் 500

கடைகளோடு தேவையான வாகனங்கள் நிறுத்தும் வசதி மற்றும் இதர வசதிகளுடன் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**18. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் வெளிப்படையான நிர்வாகம் மற்றும் விரைவான திட்ட அனுமதி செய்முறைக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் கணினி வழி கூர்ந்தாய்வு செய்ய மென்பொருள் ஒன்று அறிமுகப்படுத்தப் படவுள்ளது. இந்த மென்பொருளை உபயோகித்து கட்டிட கலைஞர்களும் விண்ணப்பதாரர்களும் அவர்களுடைய வரைப்படங்கள் வளர்ச்சி விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளதா என்பதை அவர்களே தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



**19. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை ஒப்பந்த பேருந்து நிலைய நெரிசலை தவிர்க்கவும் பயணிகளின் வசதிகளை மேம்படுத்தவும் சென்னை ஒப்பந்த பேருந்து நிலையத்தின் அருகாமையிலுள்ள 4 ஏக்கர் நிலப்பரப்பில் 420 கோடி ரூபாய் மதிப்பில் பயணிகளின் வாகனங்கள் மற்றும் பேருந்துகள் நிறுத்தல் மற்றும் இதர வசதிகளோடு கூடுதலாக வாகனம் நிறுத்துமிடம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஆர். வைத்திலிங்கம்**
**அமைச்சர்**
**வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை**



**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**
**மானியக் கோரிக்கை எண். 26**

அறிவிப்புகள்
**2012–2013**
**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி**
**இதயதெய்வம் அம்மா**